# நீதி அமைச்சு

## கட்டளை சேவகர் மற்றும் எழுத்தாணை நிறைவேற்றுநர் / நீதிமன்ற கட்டியக்காரர் மற்றும் வாயிற்காப்பவர் பதவிக்குரிய முதலாம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சை –2020

1.0 அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் 2016.07.26 ஆம் திகதிய PSC/EST/06-01-32/01/2016 ஆம் இலக்க அங்கீகாரம் பெறப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறையின் 08 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைய கட்டளை சேவகர் மற்றும் எழுத்தாணை நிறைவேற்றுநர் / நீதிமன்ற கட்டியக்காரர் மற்றும் வாயிற்காப்பவர் ஆகிய பதவிகளின் தரம் III ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் 2021 பெப்ரவரி மாதம் நடாத்தப்படும் என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது.

2.0 கட்டளை சேவகர் மற்றும் எழுத்தாணை நிறைவேற்றுநர் / நீதிமன்ற கட்டியக்காரர் மற்றும் வாயிற்காப்பவர் ஆகிய பதவிகளின் தரம் III ஐச் சேர்ந்த அலுவலர்களுக்கான இப்பரீட்சை கொழும்பில் நடைபெறும்.

3.0 தகைமைகள் - கட்டளை சேவகர் மற்றும் எழுத்தாணை நிறைவேற்றுநர் / நீதிமன்ற கட்டியக்காரர் மற்றும் வாயிற்காப்பவா ் தரம் III ஐச் சேர்ந்த நியமனத்தைப் பெற்றுள்ள அலுவலர் ஒருவராக இருத்தல்.

4.0 விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களை திணைக்களத் தலைவர் ஊடாக 2021.11.15 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கும் வகையில், பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், த.பெ. 1503, கொழும்பு எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு அனுப்பிவைக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் மற்றும் உரிய தகவல்கள் பூர்த்தி செய்யப்படாதுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

5.0 பரீட்சை அபேட்சகர்கள் பரீட்சை மண்டபத்திற்குள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையக்கூடிய வகையில் தமது ஆள்அடையாளத்தை உறுதி செய்தல் வேண்டும். இதற்குப் பின்வரும் ஆவணங்களில் ஏதேனுமொன்று ஏற்றுக் கொள்ளப்படும்.

I. தேசிய அடையாள அட்டை.
II. செல்லுபடியான வெளிநாட்டுக் கடவுச்சீட்டு
III. செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்

மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆள்அடையாள அட்டையை சமர்ப்பிக்க முடியாத விண்ணப்பதாரிகளின் அபேட்சகர் அந்தஸ்து இப்பரீட்சை, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தற்றுணிபின் பேரில் ரத்துச் செய்யப்பட முடியும். பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு அபேட்சகர்கள் கட்டுப்படுகின்றாா்கள். மேற்படி சட்டங்கள் மற்றும் விதிகளை மீறும் பட்சத்தில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கும் அபோட்சகர்கள் உட்பட வேண்டி ஏற்படும்.

மேலும் பரீட்சை அபேட்சகர்கள் தமது ஆள்அடையாளத்தை உறுதி செய்துகொள்ளக்கூடியவாறும் முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மறைக்காதவாறும் பரீட்சை மண்டபத்துக்குள் நுழைதல்

வேண்டும். அவ்வாறு தமது ஆள்அடையாளத்தை உறுதிப்படுத்துவதை நிராகரிக்கும் அபேட்சகர்கள் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சைகள் மண்டபத்திற்குள் பிரவேசித்த சந்தர்ப்பம் முதல் பரீட்சை நிறைவடைந்து அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை மண்டப அலுவலவர்களுக்கு அபேட்சகரை இனங்காணக்கூடியவாறு முகம் மற்றும் இரண்டு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

6.0 (1) விண்ணப்பப்படிவம் - மாதிரி விண்ணப்பப்படிவத்தின் இலக்கம் 01 முதல் 05 வரையான தலைப்புக்களை முதலாவது பக்கத்திலும் எஞ்சிய இலக்கங்களை ஏனைய பக்கங்களிலும் உள்ளடக்கும் வகையில்A4அளவான கடதாசியில் தயார் செய்துகொள்ளல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தை தட்டெழுத்து செய்து தயார் செய்துகொள்ள முடியுமாயினும், அதனை சரியாகவும், தெளிவாகவும் விண்ணப்பதாரியின் கைஎழுத்தினால் பூர்த்தி செய்தல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தினை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைய தயார் செய்துகொள்ளல் வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு விண்ணப்பதாரியும் ஒரு விண்ணப்பப்படிவத்தை மாத்திரமே சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், விண்ணப்பப்படிவத்தின் பிரதிகளை அனுப்ப வேண்டாம் என்றும் அறியரத்தரப்படுகின்றது. மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இசைவாக இல்லாத மற்றும் பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் அறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும். பரீட்சைக்கான விண்ணப்பப்படிவத்தில் பரீட்சையின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். மேலும், பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பப்படிவம பரீட்சை அறிவித்தலில் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இசைவாக உள்ளதா என்பது பற்றியும், சகல தகவல்களும் உள்ளடக்கப்பட்டு விண்ணப்பப்படிவம் சரியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பது பற்றியும் விண்ணப்பதாரி மீள்பரிசீலனை செய்தல் வேண்டும் என்பதுடன், மேற்படி விண்ணப்பப்படிவத்தின் பிரதியை உங்கள் வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும்.

(11) போலியான தகவல்களுக்குத் தண்டனை – விண்ணப்பப்படிவங்களை நிரப்பும் போது மிகக் கவனமாக சரியான தகவல்களை வழங்க வேண்டும். இப்பரீட்சையின் சட்டங்கள், விதிகளுக்கு அமைய யாதாயினும் அபேட்சகர் ஒருவர் தகுதியற்றவர் என்பது தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சைக்குப் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரின் அபேட்சகர் அந்தஸ்து ரத்துச் செய்யப்பட முடியும்.

(111) முதல் தடவையாக இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் அலுவலர்கள் எந்தவொரு பரீட்சைக் கட்டணத்தையும் செலுத்தத் தேவையில்லை. அவ்வாறாயினும், அதன் பின்னரான தடவைகளின் போது அலுவலர்கள் ஒரே தடவையில் முழுப் பரீட்சைக்கும் தோற்றுவார்களாயின் ரூபா 600 ஆன தொகையை பரீட்சைக் கட்டணமாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தலைப்பு 20-03-02-13 இன் கீழ் அரசாங்க வருமானத்துக்கு செலவு வைக்கப்படும் வகையில் நாடு முழுவதிலும் அமைந்துள்ள தபால் / உப தபால் அலுவலகமொன்றில் அல்லது மாவட்ட/ பிரதேச செயலகமொன்றில் பணமாக செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டை விண்ணப்பப்பவடித்தில் உரிய இடத்தில் அகன்றுவிடாதவாறு ஒட்டுதல் வேண்டும். பற்றுச்சீட்டின் பிரதியை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாக இருக்கும். எந்த நிலைமையின் கீழும் இக்கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது. இப்பரீட்சைக்குச் செலுத்தப்படும் கட்டணத்தை வேறு எந்தவொரு பரீட்சைக்கும் மாற்றல் செய்ய இடமளிக்கப்பட மாட்டாது. மேலும், பரீட்சைக் கட்டணத்துக்கு முத்திரை அல்லது காசுக் கட்டளைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

7.0 வர்த்தமானப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் எனும் கருதுகோளின் அடிப்படையில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு அல்லது அத்திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்துள்ள அலுவலர்களுக்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நேரஅட்டவணையின் பிரதியுடன் பரீட்சை அனுமதிச்சீட்டு வழங்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதிச்சீட்டு அனுப்பப்பட்டவுடன் அது பற்றிக் குறிப்பிட்டு அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் பத்திரிகைகளிலும், திணைக்களத்தின்

இணையத்தளத்திலும் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 02 அல்லது 03 நாட்கள் கடந்த பின்னரும் தமது அனுமதிச்சீட்டுக்கள் கிடைக்காதிருப்பின், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது பற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். உங்கள் வசம் வைத்திருக்கும் விண்ணப்பப்படிவத்தின் பிரதி மற்றும் பரீட்சைக் கட்டணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டின் பிரதியுடன் உங்களின் முழுப் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் பரீட்சையின் பெயரைக் குறிப்பிட்டு இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திடம் வினவுமாறு அறியத்தருவதுடன், கொழும்புக்கு வெளியே உள்ள பிரதேசத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரியாயின், உங்களது மேற்படி விபரங்களுடன், பெக்ஸ் மூலம் அனுமதிச்சீட்டின் பிரதியை துரிதமாக பெற்றுக் கொள்வதற்காக உங்களின் பெக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்டு உங்களின் கோரிக்கைக் கடிதத்தை இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு பெக்ஸ் மூலம் அனுப்பி வினவுவது பயனுள்ளதாக இருக்கும்.

குறிப்பு : அபேட்சகருக்கு பரீட்சை அனுமதிச்சீட்டை வழங்குவதானது, அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பதற்கான அங்கீகாரமாக கருதப்படக்கூடாது.

8.0 அபேட்சகர்கள் பரீட்சை அனுமதிச்சீட்டில் தமது கையொப்பத்தை நிறுவனத் தலைவர் அல்லது அவரினால் தத்துவமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் ஊடாக சான்றுப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

9.0 பரீட்சைக்குத் தோற்றும் முதல் தினத்தில் பரீட்சை நிலையப் பொறுப்பாளரிடம் தமது கையொப்பம் சான்றுப்படுத்தப்பட்டுள்ள அனுமதிச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.

10.0 பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்டுள்ள அனுமதிச்சீட்டைப் பெற்றுள்ள அலுவலர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றக்கூடிய வகையில் திணைக்களத் தலைவரினால் கடமை விடுப்பு வழங்கப்படுதல் வேண்டும். பிரயாணக் கட்டணம் செலுத்தப்படமாட்டாது.

11.0 இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடைபெறும். அலுவலர்கள் தாம் கல்வி பயின்ற மொழி மூலம் அல்லது அரசகரும மொழியொன்றின் மூலம் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியும். பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மொழிமூலத்தை பின்னர் மாற்றிக் கொள்ள இடமளிக்கப்பட மாட்டாது.

12.0 சித்தியடைவதற்கு பாடங்களுக்குரிய மொத்த புள்ளிகளில் ஆகக் குறைந்தது நூற்றுக்கு நாற்பது (40%) புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். (மேலதிக விபரங்களுக்கு கட்டளை சேவகர் மற்றும் எழுத்தாணை நிறைவேற்றுநர் / நீதிமன்ற கட்டியக்காரர் மற்றும் வாயிற்காப்பவர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறையின் 8 ஆம் பந்தியைப் பார்க்கவும்.)

13.0 அரசகரும மொழிக் கொள்கையின் குறிக்கோள்களுக்காக சகல அலுவலர்களும் தமது விண்ணப்பப்படிவங்களை அரசகரும மொழி மூலம் தயார் செய்துகொள்ளல் வேண்டும் என்பதுடன், அவை குறித்த மொழியிலேயே பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.

14.0 பரீட்சைக்குத் தோற்றும் சகல அபேட்சகர்களினதும் பெறுபேறுகளை உள்ளடக்கிய பெறுபேறு ஆவணம் இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் நீதி அமைச்சுக்குப் பெற்றுக் கொடுக்கப்படும். பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகளின் பெயர்களை நீதி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

15.0 பரீட்சை நடவடிக்கைமுறை – விண்ணப்பதாரிகள் பின்வரும் விடயங்களை உள்ளடக்கியதாக 50 பல்தேர்வு வினாக்களைக் கொண்ட எழுத்துமூலப் பரீட்சைக்குத் தொற்ற வேண்டும் என்பதுடன் சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

| இல. | பாடம் | புள்ளி | நேரம் | பாடம் |
|---|---|---|---|---|
| 1. | அலுவலக முறை, தாபன விதிக்கோவை, கணக்கீட்டு முறை | 100 | 01மணி | 01 |

15.1 அலுவலக முறை, தாபன விதிக்கோவை, கணக்கீட்டு முறை

அலுவலக முறைகளின் முக்கியத்துவம், அலுவலக முறைகள் பற்றிய கோட்பாடுகள், கிடைக்கும் கடிதங்கள் மற்றும் வெளியே அனுப்பப்படும் கடிதங்கள் தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள், ஆவணக் கோப்புகளில் குறிப்புகளை எழுதுதல், அறிக்கைகளை எழுதுதல், பொது மக்களுடன் நடவடிக்கை மேற்கொள்வது பற்றிய புரிந்துணர்வு

தாபன விதிக் கோவையின் தொகுதி 1 இன் அத்தியாய இல. XII, XXIV

நிதிப் பிரமாணக் கோவையின் III ஆம் அத்தியாயம் - நி.பி. 124 – 127

16.0 இந்த அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் வெளியிடப்படும் இந்த அறிவித்தலின் மொழிகளுக்கு இடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில்,அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி மூலமான அறிவித்தல் தத்துவமுள்ளதாகும் என்பதை கவனத்தில் கொள்ளவும். மேலும் இதில் குறிப்பிடப்படாதுள்ள ஏதேனுமொரு விடயம் இருப்பின் அது தொடர்பில் நீதி அமைச்சின் செயலாளரினால் தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

**(கையொப்பம்) / செயலாளர்,**
நீதி அமைச்சு
2021 ஒக்டோபர் மாதம் 12 திகதி
நீதி அமைச்சு,
மீயுயர் நீதிமன்றக் கட்டிடத்தொகுதி,
கொழும்பு 12.